திருவள்ளுவர் ஆண்டு 2042

ஏப்ரல் - 2011

# செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 6

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




மதுரை, செந்தமிழ்க் கல்லூரி முப்பெரும் விழாவில் மதுரை மண்டலக் கல்லூரி இணை இயக்குநர் முனைவர் த. சந்திரசேகரன் அவர்களுக்குச் செயலர் இரா. குருசாமி அவர்கள் பொன்னாடை அணிவிக்கிறார்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 55
பகுதி : 6
ஏப்ரல் 2011

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2042




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரைத்திறனில் கற்பனை (காரைக்காலம்மையார் புராணம்) | திரு. சி. வெற்றிவேலன் | 4 |
| எட்டுத்தொகையில் மரங்கள் | செல்வி சி. அழகுலெட்சுமி | 12 |
| நடப்பியல் தன்மையில் நாஞ்சில் நாடன் நாவல்கள் | திரு. மு. நாகராஜன் | 23 |
| ஓரெழுத் தொருமொழி | திரு. ஆறுவிரல் ஐம்பொறி | 27 |
| ஆழ்வார்ப் பாசுரங்களில் திருக்குருகூர் | முனைவர் மு. மீனா | 29 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

சி.கே.எஸ். எனத் தமிழக மக்களால் அறியப்பட்ட சி.கே. சுப்பிரமணியமுதலியார் அவர்களுடைய பெரிய புராண உரை சைவமும் தமிழும் தலைத்தினிது ஓங்கவும் பக்திச்சுவை நனிசொட்டச்சொட்டவும் எழுதப்பட்டுள்ளது என்பதைத் திரு.சி. வெற்றிவேலன் அவர்கள் நயம்பட உரைத்திருப்பது பாராட்டுக்குரியது.

வெண்கடம்ப மரத்தில் மலர்கள் வலஞ்சுழியாகப் பூக்கும் இயல்பினை உடையன; மேலும் வலஞ்சுழி என்பவை வலது சுழியாகப் பூத்திருப்பவை என்பன போன்ற இலக்கியச் செய்திகளை ஐங்குருநூறு மற்றும் அகநானூற்றுப் பாடல் அடிகள் வழியாகச் செல்வி. சி. அழகுலட்சுமி அவர்கள் "எட்டுத் தொகையில் மரங்கள்" என்ற தலைப்பில் தந்து வியப்பூட்டுகிறார்.

நாஞ்சில் நாடன் நாவல்களில் உள்ள நடப்பியல் பண்பை நாம் அறிந்து கொள்ள மு. நாகராஜன் அவர்கள் உதவுகிறார். செந்தமிழ் மொழியின் இலக்கணச் செழுமையை ஓரெழுத்து ஒருமொழி வழி ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் இம்மாத இதழுக்கு அழகூட்டுகிறார்.

இனிய தமிழிலும், ஆழ்ந்த பக்தியிலும் ஆழங்கால் பட்டவர்கள் அமுதமொழி ஆழ்வார்கள். 108 திவ்ய தேசங்களில் "திருக்குருகூர்" என்னும் தலம் பாண்டிய நாட்டுத் திருத்தலங்களில் மிகுந்த சிறப்புடையது என்பதை முனைவர் மு. மீனா அவர்கள் ஆழ்வார்கள் வழிநின்று வணங்கித் தருவது இம்மாத இதழுக்கு வளம் சேர்ப்பதாக அமைந்துள்ளது. மேலும் ஊரக வளம் பற்றி பாரதப் பிரதமர் உரையும், திரு.க. பரமேஸ்வரன், முனைவர் தெ. முருகசாமி அவர்களது வாசகர் வாசகமும் இடம் பெற்றுள்ள ஏப்ரல் மாத இதழைத் தங்கள் கைகளில் தவழவிடுவதில் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் பூரிப்படைகிறது.

**முனைவர் க. சின்னப்பா**

*இனி நீங்களும் இதழும்....*

# சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரைத்திறனில் கற்பனை (காரைக்காலம்மையார் புராணம்)

*திரு. சி. வெற்றிவேலன்*
அண்ணாமலை நகர்

திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்திற்கு உரை கண்டோரில் குறிப்பிடத்தக்கவர் சி.கே. சுப்பிரமணிய முதலியார். சி.கே.எஸ். உரை என்றே அவ்வுரை போற்றப்படும் பெருமை வாய்ந்தது. தேவாரங்களுக்கும், பிற திருமுறைகளுக்கும் உரை எழுத அஞ்சிய அக்காலத்தில் அரும்பாடுபட்டு உடல் நலம் குறைந்தபோதும் உரை எழுதி எடுத்த பணியைச் செவ்வனே முடித்தார். இது எதிர்காலச் சந்ததியினருக்கு அவர் செய்த பேருதவியாகும். உரையைப் படிப்போர் உணர்ந்து படிக்கும் அளவிற்குச் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட எழுதியுள்ளார்.

## உரை மரபு

சி.கே.எஸ். பழைய உரை மரபுகளுக்கு அப்பாற்பட்டு மிகச்சிறப்பாக உரை எழுதியுள்ளார். எளிதில் பொருள் விளங்கிக் கொள்ளாமல் நுட்பமாக அமைந்திருக்கும் சொல், தொடர் ஆகியவற்றை அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துக்காட்டுகளுடன் கூறிப் பொருள் உணரவைப்பது உரை எனப்படும். உரை என்பது செய்யுளில் அமைந்த நூல்களுக்கு உரைநடையில் தரப்படும் விளக்கம் என்பது பொருந்தும். செய்யுள் வடிவில் படைக்கப்பட்ட ஒரு நூல் அதன் காலத்திலிருந்து அது வாசிக்கப்படும் காலத்திற்கு இடையே மொழியில் ஏற்படும் அகப்புறமாற்றங்கள், கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படும் பொழுது தேவைப்படும் கூடுதல் விளக்கம், உரையாசிரியர் சார்ந்துள்ள

சமூகப்பின்னனி, ஒரு நூலைத் தன் சமயத்திற்காகவும், கொள்கைக்காகவும் பயன்படுத்த முற்படுதல் போன்றவற்றின் அடிப்படையில் உரையின் விளக்கம் அமைகிறது. முன்னோர்களால் உருவாக்கப்பட்ட அறிவு சார்ந்த மரபினைப் பின்வரும் சந்ததியினருக்குக் கொண்டு செல்லும் பணியாகவும் உரை எழுதுதல் செயல்பட்டு வந்துள்ளது.

"கற்பனை கலவாததாய் உணர்ச்சியோ, பிற உள்ள நிகழ்ச்சிகளோ காய்தல் உவத்தல் என்ற வேறுபாடுகளோ கலவாததாய் ஒரு பொருளின் தன்மையை உரையிட்டுக் காட்டுவதே உரை'' என்பர். (அ.மு. பரமசிவானந்தம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் உரை நடைவளர்ச்சி, ப. 12). மேலும் அவர் உரை என்பது கற்றறிந்த மதிநலம் உடையார்க்கும் மேலும் விளக்கம் தருவதாக அமைவதே உரையின் இலக்கணம் எனவும் கூறுவார்.

உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திறம் உடையவர்கள். அவர்களின் உரைகள் பொதுவான தன்மைகளைக் கொண்டிருந்தாலும் ஒவ்வொருவருக்கும் உரிய தனித்தன்மைகளையும் அவர்தம் உரைகள் காட்டுகின்றன. அவ்வகையில் சி.கே.எஸ். உரையின் தனித்தன்மைகளுள் 'கற்பனை' என அவர் குறிப்பிடுவது இங்குக் கட்டுரைப் பொருளாகிறது. வேறு எந்த உரையாசிரியரும் பின்பற்றாத உரை அமைப்பாக இது அமைந்துள்ளது.

உரை விளக்கத்தில் கற்பனைக்கு என்ன இடம் என நம்மைச் சிந்திக்க வைக்கிறது. கற்பனை என்பதற்கு அகராதிகள் தரும் பொருள்களில் 'கற்பிப்பது', 'போதனை' என இருபொருள்களும் இடம் பெறுகின்றன. இவர்தம் உரையில் சுட்டப்படும் கற்பனை என்பதற்கு இப்பொருள்கள் ஏற்புடையன எனக் கருதலாம்.

'கற்பனை' என்ற பக்கத்தலைப்பு ஒவ்வொரு புராணத்தின் இறுதியிலும் இடம் பெறுகிறது. அதில் சுட்டப்படும் செய்திகள் அப்புராணத்தின் வழி நாம் அறிந்துகொள்ள வேண்டிய அறங்களாகவும் கருத்துக்களாகவும் அமைந்துள்ளன. ஆய்வின் முடிவுகளைப் போல

அவை திறம்பட அமைந்து புராணத்தின் பயனையும் சுட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, காரைக்காலம்மையார் புராணத்தில் சுட்டப்படும் கற்பனைப் பகுதியை நோக்கலாம்.

### வணிகரைப் பற்றிய செய்திகள்

அடியார்களது குலப்பெருமை கூறுவது சேக்கிழாரின் இயல்பு. காரைக்காலம்மையார் வணிகர் குலப்பெண் ஆதலின் அக்குலப் பெருமைகளாக அவர் சுட்டுவதைத் தொகுத்துத் தருகிறார் உரையாசிரியர். வணிகச் செய்திகளும் அதில் இடம்பெறுகின்றன. அவற்றின் வழி அக்கால வணிகத்தில் இருந்த் நேர்மையும் வணிக இயல்பும் புலனாகிறது.

தருமத்தின் வழிநின்று வாய்மையில் ஊனமில்லாத சிறப்பு, பெருவணிகரது குடிகளின் இயல்பு; வணிகர் வாழும் கடற்கரைப் பட்டினங்களில் கடலலைகள் சுமந்து கரைக்கேற்ற, கழிகளில் தங்கும் சங்குகளினால் வளம் பெருகும் வகையால், வாணிகத்தின் இயல்பைக் கடல் அலைகள் காட்டும்.

மரக்கலம் செய்தல், மரக்கலத்திற் கடல் கடந்து வேற்றுப் புலங்களில் விரும்பும் பண்டம் கொண்டு சேர்த்து வாணிபம் செய்தல் என்றிவை பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னரே நமது முன்னோர்கள் அறிந்து கையாண்டுவந்து பழக்கத்தில் வந்தவையாம். அந்தத் தொழில்களும் அயல் நாட்டு வாணிபமும் அறவே ஒழிந்த நிலையில் நமது நாடு காணப்படுவது நம் நாட்டின் தாழ்ந்த நிலையினைக் காட்டுவது எனத் தன் ஆராய்ச்சிக் கருத்தை விளக்குகிறார்.

மனையறத்தின்படி வளம் பெருக்கி இயல்னை நீங்கி வெளிநாடு செல்லாது செய்யப்படுதலும், கப்பலோட்டிக் கடல்மீது வேற்று நாடு சென்று செய்யப்படுவதும் என வாணிபத்துறை பண்டைய நாடுகளிலும் இருவகையாய் இயன்றது. உள்ளூரிலேயே வாணிபம் செய்து வந்தவன் புனிதவதியாரின் கணவன் தனதத்தன். அவன் புனிதவதி கொண்டு வந்த இன்னொரு கனியைப் பார்த்தவுடன் அம்மையாரை விட்டு

நீங்குவதனையே எண்ணி அதற்குப் பொருந்தும் முயற்சியை மேற்கொள்வானாய்,

*''படுதிரைப் பரவை மீது படர்கலங் கொண்டுபோகி*
*நெடுநிதி கொணர்வே னென்ன, நிரந்தபல் கிளைஞராகும்*
*வடுவில்சீர் வணிக மாக்கள் மரக்கலஞ் சமைப்பித் தார்கள்''* *(1748)*

*''கலஞ் சமைத் ததற்கு வேண்டுங் கம்மிய ருடனே செல்லும்*
*புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப வேற்றிச்*
*சலந்தரு கடவுட் போற்றித் தலைமையா நாயகன் றானு*
*நலந்தரு நாளி லேறி நளிர்திரைக் கடன்மேற்போனான்''* *(1749)*

என்ற பாடல்களுக்குரிய ஆராய்ச்சிப் பகுதியாக மேலே கூறியவற்றைத் தருகிறார். இன்னும்,

*''கடன்மிசை வங்கமோட்டிக் கருதிய தேயந் தன்னில்*
*அடைவுறச் சென்று சேர்ந்தங் களவில் பல வளங்கண் முற்றி*
*யிடைசில நாட்க ணீங்க மீண்டுமக் கலத்தி லேறிப்*
*படர்புனற் கன்னி நாட்டோர் பட்டினமருக்கு சார்ந்தான்''* *(1750)*

என்ற பாடலில் ''அங்கு அளவில் பல் வளங்கள் முற்றி' என்பதற்கு வாணிப முறையில் தான் கொணர்ந்த பண்டங்களை ஊதியம் பெற விற்று நிதியீட்டியும், மேல் திரும்பும் நிலையில் அந்நாட்டுப் பண்டங்களை ஊதியத்தின் பொருட்டுத் தான் சேரும் நாட்டில் விற்க நிறையக் கொண்டும் இவ்வாறு விற்றும் வாங்கியும் பல் வளங்களையும் நிறைவாக்கி'' என்று உரை எழுதுகிறார். இவ்வாறு உரை மரபு சாரா நிலையில் உலகியலோடு தொடர்புபடுத்தி உரை எழுதுவது இவரது தனித்தன்மையாகக் காணப்படுகிறது.

## பெண்டிர் சிறப்பு

பெறற்கரிய பெண் மகவு எனப் பெண் குழந்தை இப்புராணத்தின் வழி சேக்கிழாரால் பாராட்டப்படுவதைச் சுட்டிக் காட்டுகிறார். பெறற்கரிய

பெண்மகப் பெறுதல் முன்னைத் தவத்தால் ஆயது என்பதை வலியுறுத்துகிறார். தளர் நடைப் பருவத்தே அடிமைப் பண்பிற் பழகி வருமொழி பயிலுதலும், மொழி பயின்ற பின் எல்லாம், வண்டலாட்டயரும் பருவத்தேயும் இறைவர்பால் காதல் சிறந்த திருவார்த்தை பயில்வதும் முன்னைத் தவப்பேற்றாலாயது எனப் பெண் குழந்தையாகிய காரைக்காலம்மையார் இறைநெறி நின்ற தன்மையைப் புகல்வார்.

ஒரு குடிக்கு ஒரு புதல்வியாய் அமைந்தநிலையில் அப்பெண்ணை மணமகனின் ஊருக்கு அனுப்பாது பொருள் கொடுத்துத் தன் ஊரிலேயே வைத்துக் கொள்வது வணிகக் குல வழக்கு என்பதை உளங்கொண்ட ஆசிரியர் அதை,

''ஒரு குடிக்கு ஒரு புதல்வியாய் அமைந்தபோது கல்யாணம் முடிந்தபின் அப்பெண் பிறந்த நகரைவிட்டு மணமகனது நகருக்குச்செல்லாது பெற்றோர்கள் இருக்கும் நகரில் தனம் பெருகக் கொடுத்து வேறு குடிவாழ்க்கையாக வாழ வைப்பதும் வணிகர்பால் முந்தையோரால் நிகழ்ந்த ஒரு வழக்கு'' என உரையாசிரியர் எடுத்தியம்புகின்றார்.

மனை அறத்தில் வழுவாது ஒழுகும் மாதர்கள், ''அந்நிலைக்கண்ணின்றே, தமது மனையின் வந்தணையும் அடியார்க்கு அன்புடன் அமுதூட்டியும், பொன்மணி, துகில் முதலியவற்றில் வேண்டுவனவற்றை அளித்தும் இறைவன் திருவடிக் கீழ் உணர்வு முதிரும்படி ஒழுகிச் சிவநெறி நிற்றலும் கூடும். உடல் நாயகனாகிய கணவன் தம்மிடம் சேர்த்து வைப்பித்த பண்டங்களை அவன் இன்னதற்குப் பயன்படுத்துக என்று பணிக்கப் பெறாதபோது மனைவியார் அவற்றை ஏற்றவாறு உயிர் நாயகராகிய இறைவர்பால் ஏற்பித்துப் பயன்படுத்துதலும் கற்பு நெறி நிற்கும் மனைவியார்க்கு இல்லறத்திற்குரிய வழக்கமாகும்'' என இல்லறத்தை நல்லறமாக்கும் நெறி இப்புராணத்தின்வழி அறியப் படுவதாகக் காண்கிறோம். கணவனிடம் உண்மையை மறைத்தல் கூடக் கற்பு நெறிக்கு இழுக்கெனக் காட்டுகின்றார்.

உடலின் நாயகனால் கைவிடப்பட்டபோது அவனை விட்டொழிந்து, உயிரின் நானயகனாகிய சிவன்பாலே சித்தம் வைத்து அவனுடைய சார்பே சார்பாக அடைந்துவிடுவது உண்மையறிந்த பெண்ணியல்பு என்ற கருத்தை,

*''ஈங்கிவன் குறித்த கொள்கையிது வினி யிவனுக்காகத்*
*தாங்கிய வனப்பு நின்ற தசைபொதி கழித்திங் குன்பால்*
*ஆங்குநின் நாள்கள் போற்றும் பேய்வடி வடியேனுக்குப்*
*பாங்குற வேண்டுமென்று பரமர்தாள் பரவி நின்றார்''* **(1765)**

என்ற பாடலுக்குரியதாகக் கூறுகிறார்.

## இல்லறத்தில் கணவன்

கணவன் தன்னில் பாதி என மனைவியை எண்ணிச் செயற்படவேண்டும். அவளை அடிமையெனக் கருதிச் செயல்படல் இனியதன்று. ஒரு பொருளைத் தான் பெற்ற போது அதில் ஒரு பங்கு மனைவிக்கும் உண்டு என எண்ண வேண்டும். தனதத்தன் தான் பெற்ற மாங்கனி இரண்டையும் மனைவிக்கும் வேண்டுமெனக் கருதாது தானே உண்ணக் கருதினான் இதை உரையாசிரியர்,

''இனிய உணவிப் பண்டம் பெற்றபோது அவற்றுள் ஒரு பங்கு மனைவிக்கும் உண்டு என்று எண்ணாது நாவின் சுவைப் புலனுக்கு ஆளாகித் தானே முழுவதும் உண்டு விடுதல் நல்ல கணவனுக்குப் பாங்கன்று'' என்று குறிப்பிடுகிறார். ஏனெனில் மனைவியிடத்தில் இவ்வாறு ஒழுகுகின்றவர் உலகில் வேறுயாவர்க்கு என்ன நலன் விளைக்க வல்லார்? எனக் கேட்டு அதன் வழி ''பிறர்க்குக் கொடுத்து அவரது இன்முகம் கண்டு மகிழும் இன்பம் அறியாதார் தமது உடைமைப் பொருளை இழந்தவரேயாவர்'' என அறம் கூறுகின்றார்.

மனைவியை வஞ்சித்துப் பொய்போக்குக் காட்டி நீத்துச் சென்று விடுவது கணவன்பால் நல்லொழுக்கமன்று (1748-1752) என்றும், அந்நிலையில் மனைவியின் சுற்றத்தார் பூசல் செய்யாது எவ்வாற்றாலும் மனைவி கணவனுடன் வாழவேண்டியது கற்பு எனக் கொண்டு

மனைவியைத் தானே கொண்டுபோய் கணவனிடம் சேர்த்துவிட முயல்வது நல்ல சுற்றத்தாரின் செயல் என்று அச்சமுதாய நெறியைக் காட்டுகின்றார். அவ்வாறு கணவனுடன் மனைவியைச் சேர்க்க சிவிகையில் கொண்டு செல்லும் பொழுது சிவிகை திரையிடப்பட்டிருக்க வேண்டும் என்று முந்தைநாள் பழம்பெருங்குடிகளின் வழக்கினைக் காட்டுகின்றார்.

*"..............மடநடை மயிலன்னாரைத்*
*தாமரைத் தவிசின் வைகுந் தனித்திரு" (1758)*

என்ற அடிகளை உளங்கொண்டு மேற்கண்ட ஆய்வு விளக்கம் கொடுக்கப்படுகிறது.

மனைவியைத் தெய்வமென்று எண்ணித் துணிந்து கொண்ட கணவன் அத்துணிவுபற்றி நிலமுற வீழ்ந்து பலருங்காண வணங்குதல் ஓரியல்பாகும்.

## இறைநெறி

சிவனடியாரை ஊட்டுவித்துக் காரைக்காலம்மையார் இவ்வளவு துன்பங்களுக்குக் காரணமாக வேண்டுமா? என்ற வினாவிற்கு விடையாகச் சிவனடியாரை ஊட்டும் உணவு இறைவன் கண்டதாகும். அடியாரை ஊட்டிய மாங்கனி இறைவரை வேண்டத் தரப்பட்ட நிகழ்ச்சி இவ்வுண்மையை நன்கு விளக்குவது,

*"அம்மருங்கு நின்றயர்வ ரருங்கனிக்கங் கென்செய்வார்*
*மெய்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்*
*தம்மனங்கொண் டுணர்தலுமே யவரருளாற் றாழ்குழலார்*
*கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று"*

என்னும் பாடல் எனக் காட்டுகின்றார். இறைவன் ஒருவனுக்குச் செய்யும் பேரருள் பிறர் அறிய விளம்பும் தகைமைத்தன்று என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. ''கணவனர்ல் இறைவன் திருவருளை உணரமுடியவில்லை, அதே சமயம் மனைவி மட்டும் உணர்ந்திருப்பது எப்படி என எண்ணுவார்க்கு விளக்கமாக "இறைவனது திருவருள் நிகழ்ச்சி

தெளிந்து அறிதற்பாலதன்று'' (1745) என்று பகர்வார். எல்லாம் சிவனிடத்தே ஒப்புவித்த அன்புநிலையில் உள்ளார்க்கு வரும் துன்பங்களையும், கவலைகளையும் தானே தாங்கி நிற்பது சிவனது செயலாகும். அந்த அன்பு நெறியில் தெளியாதவர்க்கும் அருள் வெளிப்பாட்டு நிகழ்ச்சிகள் அச்சமே தரும் என்றும் காரைக்காலம்மையார் புராண நிகழ்ச்சிகளின் அடிப்படையில் உலகியல் பயன்பாட்டுக் கருத்துகளை விளக்கமாக எடுத்தியம்புகிறார். அடியார்களிடத்தும் சிவலிங்கத்தினிடத்தும் தம்மைக் கண்டு மறவாது பேணுபவர்களை இறைவன் காத்து இன்பம் தந்து தம்மலரடிக் கீழ் வைப்பான். எனவே இறைவனிடம் நாம் வேண்டிப் பெறும் நல்வரங்களாவன பிறவாமையும் அவரை மறவாமையுமே. என்றும் மீளாது சிவனது ஆனந்த நிறைவினுள் அடங்கி அம்மகிழ்ச்சியினுள் அமிழ்ந்து கிடத்தல் முத்தி நிலையாம். அதனையே குறிக்கொண்டு பெறமுயலுதல் அறிவு பெற்ற உயிர்களின் கடமையாகும்.

## முடிவுரை

உரை மரபுகளை மீறாமலும் மரபுக்கு அப்பாற்பட்டுக் காலச்சூழலுக்கேற்பவும், அறிவின் திறத்தை எல்லாம் வெளிப்படுத்தியும் உணர எழுதிய சி.கே.எஸ்.சின் உரைத்திறனில் கற்பனை என்ற பகுதி தனிச்சிறப்புடையது. கற்றார்க்கும், கற்பிப்போருக்கும், சொற்பொழிவாளர்க்கும், ஆய்வாளருக்கும் பயன்தரத்தக்க வகையில் ஆய்வு முடிவுகளாக அமைந்து சிறப்பிடம் பெறுகிறது. வேறு உரையாசிரியர்களால் பின்பற்றப்படாத தனித்தன்மையுடன் ஆய்வுப் போக்காக அமைந்து சி.கே.எஸ். மிகச் சிறந்த திறனாய்வாளர் என்பதற்கேற்ற சான்றாக அமைந்து சிறக்கிறது. கற்பனை கடந்த ஜோதியாகிய சிவபெருமானின் அடியார்கள் திறம் பேசும் பெரியபுராணத்திற்குக் கண்ட உரையில் கற்பனை பகுதி நயம் மிக்கதாய்ப் போற்றத்தக்கது எனில் மிகையில்லை.

# எட்டுத்தொகையில் மரங்கள்

*செல்வி சி. அழகுலெட்சுமி*
சிவகாசி

சங்ககால வாழ்க்கை நிலையினை முதல், கரு, உரி என்ற மூன்று பொருள்களின் வழி சங்கப்புலவர்கள் கருத்தோவியமாய்ப் படைத்துள்ளனர். உரிப்பொருளாகிய மக்கள் ஒழுக்கத்திற்குப் பின்னணியாகக் கருப்பொருளும், முதற்பொருளும் அமைகின்றன. அவ்வகையில் கருப்பொருட்களுள் ஒன்றான மரங்களும் அவற்றின் மலர்களும் மக்கள் வாழ்க்கையில் சிறப்பிடம் பெறுகின்றன. அகத்திணைகள் அனைத்தும் மரங்களால் பெயர் பெறுகின்றன. புறத்திணைகள் பூக்களால் பெயர் பெறுகின்றன. மரங்களும் மலர்களும் அவற்றின் பயன்பாடுகளும் மக்கள் வாழ்க்கையில் சிறப்பிடம் பெறுவதால் ஆய்வுக்குரிய பொருளாகின்றன. எட்டுத்தொகைப் பாடல்களில் ஒவ்வொரு திணையிலும் இடம் பெறும் மரங்களின் பொதுத் தன்மைகள், பயன்பாடுகள் போன்ற செய்திகள் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன.

## குறிஞ்சி நிலத்து மரங்கள் :

மலையும் மலை சார்ந்த பகுதியையும் உடையது குறிஞ்சி நிலம் ஆகும். இக்குறிஞ்சி நிலத்தில் அடர்ந்துயர்ந்த மரங்களும், படர்ந்து செழித்த செடி கொடிகளும், தொடர்ந்திழியும் அருவிகளும், இடர் விளைவிக்கும் விலங்குகளும், செறிந்திருக்கும் மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்து மரங்களான வேங்கை, கோங்கு, சந்தனம், அகில், அசோகம், தேற்றா, கடம்பம், பலா, வாழை, தேக்கு, இற்றி போன்ற மரங்கள் கண்டறியப்படுகின்றன. இவற்றுள் வேங்கை மரம் மிகுதியான இடங்களில் (56 பாடல்களில்) பயின்று வந்துள்ளது என்றும், அகில மரமும், இற்றி மரமும் குறைவான இடங்களில் (2 இடங்களில்) பயின்று வந்துள்ளன என்றும் அறியப்பட்டுள்ளது.

## குறிஞ்சி நிலத்து மரங்களின் பொதுத்தன்மைகள்

குறிஞ்சி நிலம் மலைப்பகுதி என்பதால் இப்பகுதியில் வாழும் மரங்கள் அப்பகுதியில் காணப்படும் தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ப அச்சூழலில் வளர்வதற்கான சில பொதுத் தன்மைகளை அம்மரங்கள் பெற்றுள்ளன. குறிஞ்சி நிலத்து மரங்களில் தேக்கு, வேங்கை, இற்றி போன்ற மரங்கள் இலையுதிர் மரங்களாகும். இவை கோடை காலத்தில் மிகுதியான வெப்பத்தினைத் தாங்கிக் கொள்ள இயலாமல் இலைகளை உதிர்த்துவிடுகின்றன.

அகநானூற்றுப் பாடலடிகள் (143:2) தேக்கமரம், வெப்பத்தினால் தன்னுடைய இலைகளை உதிர்த்து விடுகின்ற செய்தியினைக் குறிப்பிடுகின்றன. வேங்கை மரங்கள் கொத்தாகப் பூக்கும் இயல்புடையவை என்னும் செய்தியினை அகநானூற்றுப் பாடலடி (182:1) குறிப்பிடுகின்றது. பாரியின் பறம்பு வனத்தில் உழவர் உழாத, நான்கு பயனில் பலாவின் பழத்தை இரண்டாவது பயன் எனக்கூறுவர். இச்செய்தியினை,

*"இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே"*

என்ற புறநானூற்றுப் பாடலடி (109:5) குறிப்பிடுகின்றது. "இலக்கியத்தில் விதையானது காழ் அல்லது அரிசி எனக் குறிக்கப்படுகின்றது". பலாவின் விதை 'காழ்' என்று குறிக்கப்படுகிறது. இச்செய்தியினை,

*"ஆய்சுளைப் பலவின் மெய் கலை உதிர்த்த*
*துய்த் தலை வெண் காழ் பெறூஉம்"*

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் (7:20-21) குறிப்பிடுகின்றன. பூக்கள் பூக்கும் இயல்பினைப் பொறுத்து வலஞ்சுழியுடையவை இடஞ்சுழியுடையவை என இருவகைப் படுத்துவர். வெண்கடம்ப மரத்தில் மலர்கள் வலஞ்சுழியாகப் பூக்கும் இயல்பினையுடையன. வலஞ்சுழி என்பவை தண்டில் அல்லது பூக்காம்பில் வலது சுழியாகப் பூத்திருப்பவை. இச்செய்தியினை,

*"வலஞ்சுரி மராஅம் வேய்ந்து நம்*
*மணங்கமழ் தண்பொழில் மலரும் பொழுதே"*

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் (348:2) குறிப்பிடுகின்றன. அசோக மரத்தில் ஊசியிலைகள் ஒன்றுக்கொன்று எதிர்எதிராகக் காணப்படுகின்றன. இதனால் சங்கப் புலவர்கள் இதனைப் பகைத்தழை என்று குறிப்பிட்டுள்ளனர் (ஐங்கு. 211)

## முல்லை நிலத்துமரங்கள்

காடும் காடு சார்ந்த நிலமுமான முல்லை நிலத்தில் சிறுசெடிகள், புதர்ச்செடிகள், மரங்கள் எனப் பலதரப்பட்ட தாவர வகைகளும் வாழ்வதற்கேற்ற சூழல் உள்ளது. இந்த ஆய்வில் முல்லை நிலத்து மரங்களாகக் காயா, கொன்றை, பிடவம், விளவு, குரவம், குருந்தம் போன்ற மரங்கள் கண்டறியப்பட்டன. முல்லை நிலத்து மரங்களுள் கொன்றை மரம் அதிகமான எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது. விளாமரமும், குருந்தமரமும் குறைவான எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளன.

## முல்லை நிலத்து மரங்களின் பொதுத் தன்மைகள்

ஒரே நிலத்தில் வாழும் தாவரங்கள், அந்நிலத்தில் வாழ்வதற்கேற்ற சில பொதுத் தன்மைகளைப் பெற்றிருக்கும். முல்லை நிலத்து மரங்களான கொன்றை, குருந்து, பிடவம், காயா போன்ற மரங்கள் முல்லை நிலத்திற்குரிய சிறப்பான கார்காலத்தில் மலரும் இயல்புடையன. முதுவேனில் காலத்தில் பொலிவிழந்து கார்ப்பருவத்தில் காயா மரம் மலர்ந்துள்ள செய்தியைக் குறுந்தொகைப் பாடலடிகள் (183:6-7) குறிப்பிடுகின்றன.

முல்லை நிலத்து மரங்கள், கார்காலம் தொடங்கும் பருவத்தே மலர்ந்து கார்கால வரவினை எடுத்துக் கூறும் வகையில் பருவம் தவறாமல் மலரும் தன்மையுடையன. கொன்றை மலர் சிவபெருமானுக்கு உகந்த மலராகப் பல சங்கப் பாடல்களில் கூறப்பட்டுள்ளது. சான்றாக,

*''கார் விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்*
*தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்''*

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் (1:1) குறிப்பிடுகின்றன. இப்பகுதி சிவபெருமான் கொன்றைமலர் மாலையை அணிந்துள்ள நிகழ்வைக் குறிப்பிடுகின்றது. ''குரவமரம் குறுமரம்' வகையைச் சார்ந்தது. குறுமரங்களின் கிளைகள் பெரும்பாலும் வலிமையற்றுக் காணப்படும்.

அதே போன்று குரவமரத்தின் கிளைகளும் வலிமையற்றுக் காணப்படும். இச்செய்தியினை அகநானூற்றுப் பாடலடி (251:4) குறிப்பிடுகின்றது. குருந்த மரம் கண்ணபிரானோடு தொடர்புடையது. அரக்கரின் சூழ்ச்சியால் தன்மேல் வீழ்ந்து தன்னைக் கொல்ல இருந்த குருந்த மரத்தைக் கண்ணன் முறித்ததாகப் புராணச் செய்தி உண்டு. இச்செய்தியினை அகநாலூற்றுப் பாடலடிகள் (39) குறிப்பிடுகின்றன.

## மருதநிலத்து மரங்கள்

திணை அடிப்படையிலான, பழந்தமிழர் வாழ்க்கையில் சமவெளிப் பரப்பினை உடையதும், வயலும் வயல் சார்ந்த நிலப்பகுதியினை உடையதுமான நிலம் மருத நிலம் ஆகும். நாகரீகத் தொட்டில்கள் எனக் கருதப்படும் ஆற்றங்கரைகளை உடையது மருதநிலம். வளமான வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருதநிலத்தில் வாழும் தாவரங்கள் யாவும் செழிப்புற்று வளரும் தன்மையுடையன. மருதநிலத்து மரங்களாக மருதமரம், காஞ்சிமரம், வஞ்சிமரம், மகிழமரம் போன்ற மரங்கள் கண்டறியப்பட்டன. மருதநிலத்து மரங்களில் மருதமரம் அதிகமான எண்ணிக்கையில் பாடல்களில் இடம் பெற்றுள்ளது. மகிழமரம் குறைவான எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளது.

## மருதநிலத்து மரங்களின் பொதுத் தன்மைகள்

செழுமையான மருத நிலங்களில் வாழும் மரங்கள் பொதுவாக நீர் நிறைந்த ஆற்றங்கரையினிலே வளரும் தன்மையுடையன. மருதமரம் நீர்நிலைகளை ஒட்டியே காணப்படும் செய்தியினை, ஐங்குறுநூற்றுப் பாடலடி (33:3) குறிப்பிடுகின்றது. இதே போன்று மருதநில மரமான காஞ்சி மரமும், (அகம் 25:2) வஞ்சி மரமும் (226:2) ஆற்றங்கரையில் வாழும் இயல்புடையன. எட்டுத் தொகைப் பாடல்களில் வரும் மரங்களில் 'திரு' என்ற அடையொடு வழங்கும் மரபு மருதமரம் மட்டுமே ஆகும். 'திசை திசை தேனார்க்குந் திருமருத முன்றுறை'' என்ற கலித்தொகை பாடலடி (27) மருதமரத்தை 'திரு' என்ற அடையொடு வழங்கியுள்ளது. எட்டுத்தொகைப் பாடல்களிலேயே பாதிரி மற்றும் மருதமரத்து பூக்களைத் தான் 'உளைப்பூ' என்று எட்டுத்தொகைப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். 'உளைப்பூ' என்பது நன்கு விரிந்த நிலையிலுள்ள பூவினைக் குறிக்கும். இச்செய்தியை, ஐங்குறுநூற்றுப் பாடலடி (7:4) குறிப்பிடுகின்றது. காஞ்சி என்பது புறத்திணைகளில் ஒன்றாகும்.

மகிழமரம் பரிபாடலில் மட்டுமே பயின்று வந்துள்ளது.

*'குல்லை வகுளம் குருக்கத்தி பாதிரி'*

என்ற பரிபாடல் பாடலடியில் (12.79) பயின்று வரும் வகுளம் மகிழ மரத்தினையே குறிக்கும். 'பசும்படி வகுளம்' என்ற குறிஞ்சிப்பாட்டிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் வகுளம் என்பதற்கு மகிழம்பூ என்று உரை கூறியுள்ளார்.

## நெய்தல் நிலத்து மரங்கள்

புவித் தோற்றத்தில் மூன்றில் இரண்டு பகுதி கடல் பகுதி ஆகும். இக்கடல் பகுதியும் அதனைச் சார்ந்த நிலமும் தான் நெய்தல் நிலம் ஆகும். கடலும் கடல் சார்ந்த நிலமுமான நெய்தல் நிலத்து மரங்களாக ஞாழல்மரம், புன்னைமரம், தில்லைமரம், பனைமரம், செருந்திமரம், தாழைமரம், தென்னைமரம் போன்ற மரங்கள் கண்டறியப்பட்டன. எட்டுத்தொகைப் பாடல்களில் இடம்பெறும் நெய்தல் நிலத்து மரங்களுள் புன்னையும் (47 பாடல்களில்), தாழையும் (27 பாடல்களில்) மிகுதியான இடங்களில் பயின்று வந்துள்ளமை புலப்படுகிறது. தில்லையும், தெங்கும் குறைவான எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளன.

## நெய்தல் நிலத்து மரங்களின் பொதுத் தன்மைகள்

கடலும் கடல் சா்ந்த நிலமான நெய்தல் நிலத்தில் வளரும் மரங்கள் பெரும்பாலும் நறுமண்முள்ள மலர்களைக் கொண்டுள்ளன. நெய்தல் நில மரமான புன்னைமரம் மணம் வீசும் மலர்களைக் கொண்டது. எனவே,

*'தேனிமிர் நறு மலர்ப்புன்னை'* என அகநானூறு குறிப்பிடுகின்றது.

இதே போன்று நெய்தல் நில மரங்களான செருந்தி மரத்தின் மலர்களும் (புறநானூறு 309:3), ஞாழல் மரத்தின் மலர்களும் (ஐங். 141) நறுமணமிக்கவை. மேலும் நெய்தல் நிலத்து மரங்கள் தனித்து இல்லாமல் மற்ற நெய்தல் நிலத்து மரங்களோடு சேர்ந்து வளரும் இயல்புடையன. இச்செய்தியினை ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் (103:1-2) குறிப்பிடுகின்றன.

*...... புன்னனையொடு*

*ஞாழல் பூக்குந் தண்ணந் துறைவ*

இதே போன்று புன்னை மரம், தாழை மரம் செருந்தி மரத்தோடு நின்ற காட்சியைக் கலித்தொகைப் பாடலடிகள் (127:1-3) குறிப்பிடுகின்றன. கடற்கரையில் வாழும் இயல்புடைய புன்னை மரம் கிழக்குக் காற்றால் தாக்கப் பெறாமல் இருப்பதற்காக இதன் கிளைகள் மேற்கு நோக்கி வளைந்து இருக்கும். இச்செய்தியினை, நற்றிணைப் பாடலடிகள் (91:2-6) குறிப்பிடுகின்றன. கடற்கரையில் வாழும் இயல்புடைய தாழைமரம், கடலலைகளிலிருந்து காத்துக் கொள்ள தாங்குவேர்களைக் கொண்டுள்ளன. இத்தாங்கு வேர்கள், மரத்திற்குக் கூடுதல் பலமாக அமைகின்றன.

"பெரிய மரங்களின் கிளைகள் நாற்புறமும் பரந்து விரிந்து வளர்ந்து செல்கின்றன. அவற்றின் கிளைகளிலிருந்து வேர்கள் கீழ் நோக்கி வளரும் இவ்வேர்களுக்கு விழுதுகள் என்று பெயர். இவைகளில் வேர் நுனி மூடி இருக்கும். இவை நிலத்தை அடைந்தவுடன் தூண் போலப் பெரிதாகித் தரையில் நன்றாக ஊன்றிக் கொள்ளுகின்றன. இத்தகைய தூண் வேர்கள் மரத்தைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளுகின்றன' என்று தாங்கு வேர்களுக்கு பாலசந்திரகணேசன் விளக்கம் அளித்துள்ளார். இத்தகைய தாங்கு வேர்களான விழுதுகளைத் தாழை மரம் பெற்றுள்ளது. இச்செய்தியினை,

*'விழ்தாட் டாழைப் பூக்கமழ் கானல்'*

என்ற நற்றிணைப் பாடலடி (78) காட்டுகிறது. மன்னர்களின் அடையாள மாலையாகப் பனம்பூ பயன்படுத்தப்பட்ட செய்தியை அறியமுடிகிறது. புறநானூற்றுப் பாடலடியில் (336:6) 'போந்தை' குடிப்பூவாக பயன்படுத்தப்பட்ட செய்தி தெரிகின்றது.

## பாலை நிலத்து மரங்கள்

உலகில் உயிர்கள் வாழ்வதற்கு மூல ஆதாரம் மழை நீர் ஆகும். பண்டைய காலத்தில் மாதத்தில் மும்மாரி பொழிந்து நிலத்தினை செழுமையடையச் செய்தன. மண்ணின் உயிர்க்கு ஆதாரமாக இருக்கும் மழைநீர் வரவு குறைந்தால், மண்ணின் இயல்பு மாறிவிடும். அதனால் தான், மலையும், மலை சார்ந்த நிலமுமான குறிஞ்சி நிலமும், காடும், காடு

சார்ந்த நிலமுமான முல்லையும், தன் நிலைமையில் திரிந்து உண்டாகும் நிலப்பகுதி பாலை நிலம் ஆகும். பாலை நிலத்தைச் சுரம் என்றும் கூறுவர். எனவே பாலை என்றோர் தனித்த நிலம் பண்டைத் தமிழகத்தில் இல்லை.

சுரமும் சுரஞ்சார்ந்த நிலமான பாலை நிலத்து மரங்களாக, வேம்பு மரம், இலவ மரம், ஆலமரம், நெல்லி மரம், ஓமைமரம், யாமரம், மாமரம், பாதிரிமரம், வாகை மரம், இருப்பை மரம், முருக்கமரம், உகாய்மரம் போன்ற மரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. எட்டுத்தொகைப் பாடல்களில் இடம்பெறும் பாலை நிலத்து மரங்களில், மாமரம் அதிகமான இடங்களில் பயின்று வந்துள்ளமை தெரிகிறது. மேலும் உகாய் மரம் குறைவான இடங்களில் பயின்று வந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

## பாலை நிலத்து மரங்களின் பொதுத் தன்மைகள்

வறண்ட பகுதிகளில் வாழும் பாலை நிலத்து மரங்கள் அந்நிலப் பகுதியில் வாழ்வதற்கேற்ப, கூரான நுனிகளை உடைய வேர்களையும், இலைகள் மிகச் சிறியதாகவும், அதிக உயரம் மரங்கள் வளரக்கூடியதாகவும் பாலை நில மரங்கள் தகவமைப்பினைப் பெற்றுள்ளன. பாலை நிலத்து மரங்கள் நீர்த்தன்மை பெறுவதற்காய், ஆழமான வேர்களைக் கொண்டுள்ளன. ஏனெனில் அப்பகுதியில் நீர்வளம் குறைவாகவும் வறட்சித்தன்மை மிகுந்தும் காணப்படும். அதற்கேற்ப பாலை நிலத்து மரங்கள் தகவமைப்பினைப் பெற்றுள்ள செய்தியை அகநானூற்றுப் பாடலடிகள் (5:8-15) குறிப்பிடுகின்றன.

*''முளிந்த ஓமை முதையல் அம் காட்டு,*
*பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி,*
*மோட்டு இரும் பாறை, ஈட்டு வட்டு ஏய்ப்ப*
*உதிர்வன படுஉப் கதிர் தெறு கவா அன*
*பரல் முரம்பு ஆகிய பயம் இல், கானம்'.*

என்ற புறநானூற்றுப் பாடலடியில் (45:2) பாண்டியருக்குரிய அடையாள மாலை வேம்பு என்று குறிப்பிட்டுள்ளது.

இலவமரம் அதிக உயரம் வளரக்கூடியது. கருமையான அடிமரத்தினைக் கொண்டது. மேலும் பாலை நிலத்தில் வாழ்வதினால் தடிமனான முட்களைக் கொண்டது. இம்முட்களில் யானைகள் உராய்ந்து

தேய்த்துக் கொள்ளும். அவ்வகையில் அம்முட்கள் வலிமையானவை. இச்செய்தியினை, அகநானூற்றுப் பாடலடி (309:7) குறிப்பிடுகிறது. வாகைமரம் கவட்டு இலைகளைக் கொண்ட செய்தியை, அகநானூற்றுப் பாடலடி (136:16) குறிப்பிடுகின்றது. ஆலமரம் பூவாது காய்க்கும் தன்மையுடையது. உரையாசிரியர்கள், 'கோளி என்ற சொல் பூவாது காய்க்கும் மரங்களைக் குறிக்கும்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

*''முழு முதல் தொலைந்த கோளியாலத்து*
*கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்கு''*

என்ற புறநானூற்றுப் பாடலடிகளில் (58:2-3) 'கோளி ஆலம்' என்று ஆலமரத்திற்கு அடையிட்டு வழங்கியுள்ளது.

## மரங்களின் பயன்பாடுகள்

மரங்கள் தங்களுக்குத் தேவையான உணவைத் தானே தயாரித்துக் கொள்ளும் உற்பத்தியாளராக உள்ளன. அதோடு பறவை, விலங்குகளுக்கு உறைவிடமாக, மரங்கள் பயன்படுகின்றன. காய்களும், கனிகளும் உணவாகவும், பறவைகளுக்கும், விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் பயன்படுகின்றன. இவற்றின் மலர்கள், மக்கள் விரும்பி அணியும் வண்ணம் நறுமணமுடையனவாக உள்ளன. மேலும் மரங்கள் இலக்கிய உலகிற்குப் புதுப்புது உவமையாகவும் உள்ளுறையாகவும் வந்து, இலக்கிய உலகிற்குப் பயன்தருகின்றன. மக்கள், பறவை விலங்கு போன்றவற்றிற்குப் பயன்தந்து சமுதாயப் பயன்பாட்டிற்கும் உதவுகின்றன.

கடந்து செல்வதற்கு அருமையான சுரத்தைக் கடந்து செல்லும் மக்கள் வெயிலால் வாடி வதங்கிப் பலாவின் சிறு காயிலுள்ள சுளைகளை உண்டு, காடு பிற்படுமாறு சென்றனர். இச்செய்தியினை,

*''சுத்தப் பலவின் வெயிறின் சிறுகாய்*
*அருஞ்சுரஞ் செல்வோ ரருந்தினர் கழியும்''*

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் (351.1-2) குறிப்பிடுகின்றன. தேக்கின் இலைகள் மற்ற இலைகளை விட அகலமாக இருப்பதினால், அவ்விலையை உணவு உண்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட செய்தியினை, அகநானூற்றுப் பாடலடிகள் (107:10-11) குறிப்பிடுகின்றன. மேலும் வாழை மர இலையும் உணவு உண்பதற்குப்

பயன்படுத்தப்பட்டது. (புறம் 158-7). அகில் மரம், சந்தனமரம் ஆகியவற்றின் கட்டைகள் நறுமணமுடையவை. இவை அக்காலத்தில் குளிர்ச்சியாகவும், நறுமணத்திற்காகவும் பயன்படுத்தப்பட்ட செய்தியினை, குறுந்தொகைப் பாடலடிகள் (21:6-7) குறிப்பிடுகின்றன.

இயற்கையைச் சார்ந்த சங்க கால வாழ்க்கையில் வேங்கை மரம் மலரும் காலத்தினையே மக்கள் திருமணத்திற்கு ஏற்ற காலமாகக் கருதினர். கலங்கல் நீரைத் தேற்றித் தெளிவிக்க தேற்றமரத்தின் கொட்டையை நீரில் தேய்ப்பர். தேற்றப் பயன்படும் இதன் கொட்டையைத் தேற்றாங் கொட்டை என்றனர். இச்செய்தியினைக், கலித்தொகைப் பாடலடிகள் (142:7-8) குறிப்பிடுகின்றன. சங்கப் பாடல்களில் கூறப்படும் தழை ஆடை அசோக மர இலைகளால் செய்யப்படும் செய்தியை, அகநானூற்றுப் பாடலடிகள் (188:10-12) குறிப்பிடுகின்றன. கோவலர்கள் தயிர்த்தாழியில் நல்ல மணம் பெறுவதற்காக அத்தாழியினுள் விளாம்பழத்தினை இட்டு வைக்கும் செய்தியினை,

*"விளம்பழங் கமழும் கமஞ்சூழ் குழீஇ"*

என்ற நற்றிணைப் பாடலடி (12-1) குறிப்பிடுகின்றது.

வையை ஆற்றின் வார்மணல் கூடிய அகன்ற துறையில் ஓங்கி வளர்ந்த மருத மரக்காவில் வதுவை அயர்தலும் நடைபெற்றுள்ள செய்தியை, அகநானூற்றுப் பாடல் அடிகள் (33:7-8) குறிப்பிட்டுள்ளன. மேலும் மழை பெய்யும் காலத்து பனையோலையைக் குடையாகப் பிடித்துப் பயன்படுத்திய செய்தியினை, புறநானூற்றுப் பாடலடி (290-7) குறிப்பிடுகின்றது. தில்லை மரங்கள் வேலியாக அமைந்து நெய்தல் நில ஊர்களைப் பாதுகாக்கும் தன்மையை,

*"தில்லைவேலி இவ்வூர்"*

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடி (131:2) குறிக்கப்படுகின்றது.

பண்டைய மக்கள் மரங்களை உயிருள்ளவையாக, தம் குடும்பத்தில் ஒருவராகக் கருதி வாழ்ந்து வந்துள்ளனர். இச்செய்தியினை, நற்றிணைப் பாடலடிகளில் (62) புன்னை மரத்தினைத் தன் சகோதரியாக கூறிய தலைவியின் கூற்று வெளிப்படுகிறது. பாலை நிலத்தில் வாழும்

யாமரத்தின் பட்டைகள் நீர்ச்சத்து மிகுந்து காணப்படும். வறண்ட நிலப்பகுதியான பாலைநிலத்தில் வாழும் யானைகள் தன்னுடைய தாகத்தைத் தீர்க்கும் பொருட்டு யாமரத்தின் பட்டையிலிருந்து நீரை பெறும் செய்தியினை,

*"நிலையுயர் யா அந் தொலையக் குத்தி*
*வெண்ணர் கொண்டு கை சுவைத்து அண்ணாந்த"*

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் (307:1-2) குறிப்பிடுகின்றன. யானை உண்ட யாமரத்தின் சக்கையை உமணர்கள் தீமூட்டப் பயன்படுத்திய செய்தியினை அகநானூற்றுப் பாடலடிகள் (257:13-17) குறிப்பிடுகின்றன:

## கடவுளும் மரங்களும்

இயற்கையோடு இயைந்த, பண்டைக்கால வாழ்வில் மக்கள் நம்பிய கடவுளரோடும் மரங்கள் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. மக்கள் மரம், நீர்நிலைகள், நெருப்பு, ஆகாயம், சூரியன், சந்திரன், இடி, மின்னல் போன்ற இயற்கைப் படைப்புகளில் இறைவன் வீற்றிருப்பதாக நம்பினர். அவ்வகையில் கடம்ப மரத்தைத் தெய்வத் தன்மை பொருந்திய மரமாகக் கருதினர். கடம்ப மரத்தில் முருகப் பெருமான் வீற்றிருப்பதாகச் சங்ககால மக்கள் நம்பிக்கையுடையவராய் இருந்தனர். இச்செய்தியினை,

*'நிலவரை அழவத்தான் வானுறை புகறந்து*
*புலவரை யறியாத புகழ்பூத்த கடம்பமர்ந்*
*தருமுனி மரபின் ஆன்றவர் நுகர்ச்சிமன்'*

என்ற பரிபாடல் பாடலடிகள் (19:1-3) குறிப்பிடுகின்றன. பாலை நிலத்து மரமான வேம்பு, ஆலமரம், வாகை போன்ற மரங்களில் கடவுள் வீற்றிருப்பதாக மக்கள் கருதி, அம்மரங்களுக்கு வழிபாடு மேற்கொண்ட செய்திகள் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

## சங்ககாலச் சமுதாயத்தில் காவல் மரங்கள்

பண்டைய காலத்தில் சிற்றரசர்கள், பேரரசர்கள் போன்றோர் ஒவ்வொருவருக்கும், அடையாளமாகக் காவல் மரங்கள் இருந்தன. இம்மரங்கள் அம்மன்னர்களுக்கு ஒப்பாகக் கருதப்பட்டன. அவ்வகையில்

வேப்பமரம் பழையன் மாறன் என்னும் பாண்டிய குலத்தவனுக்குக் காவல் மரமாக அமைந்த செய்தியினை,

*'பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்*
*முழாரை முழுமுதல் துமியப் பண்ணி'*

என்ற பதிற்றுப்பத்துப் பாடலடிகள் (15) குறிப்பிடுகின்றன. இதே போல் வாகைமரம் நன்னன் என்ற சிற்றரசனுக்குக் காவல் மரமாகப் பயன்பட்ட செய்தியினைப் பதிற்றுப் பத்து பாடலடிகள் (40:14-16) குறிப்பிடுகின்றன.

**மரங்களும் அஃறிணை உயிர்களும்**

பறவையினங்களும், மரங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் இயல்பினையுடையவை. மரங்கள் பறவைகள் வாழ்வதற்கு ஏற்ற வகையில், அவற்றிற்கு உறைவிடமாய் அமைந்துள்ளன.

நெய்தற் நிலத்தில் வாழும் பறவையான வெண்காக்கைக்கு புன்னைமரம் தகுந்த உறைவிடமாக அமையும் செய்தியினை,

*'பெருங்கடற் கரையது சிறு வெண்காக்கை*
*கருங்கோட்டுப் புன்னை தங்கும்'*

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் (16:1) குறிப்பிடுகின்றன. மேலும் பனைமரத்தில் அன்றில் பறவை வாழும் தன்மையை நற்றிணைப் பாடலடிகள் (336) குறிப்பிடுகின்றன.

# நடப்பியல் தன்மையில் நாஞ்சில் நாடன் நாவல்கள்

மு. நாகராஜன்

## நடப்பியல் சொல் விளக்கம்

'நடப்பியல்' என்ற சொல் குறித்து அறிஞர் சி. கனகசபாபதியின் கூற்று 'நடப்பியல் என்ற சொல் தமிழில் புதிய உருவாக்கம் பெற்றுள்ள சொல். இந்த இலக்கியக் கலைச் சொல் 'நடப்பு' என்ற தமிழ்ச் சொல்லுடன் 'இயல்' சேர்க்கப்பட்டதால் புதியதாக ஆகியிருக்கிறது'' என்றுரைக்கின்றார்.

## நடப்பியல் விளக்கம்

புத்திலக்கியக் கோட்பாடுகளில் ஒன்றான நடப்பியல் கருத்துப்படினும், நடப்பியல் என்பது தமிழுக்குப் புதியதன்று என்று கூறலாம். தமிழின் தொன்மை நூலான தொல்காப்பியம் நடப்பியல் குறித்துக் கூறியுள்ளது இங்கு நோக்கத்தக்கதாகும்.

*'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
*பாடல் சான்ற புலனெறி வழக்கம்'*

Realism என்று அழைக்கப்படும் கோட்பாட்டை எதார்த்தவாதம், எதார்தவியல், நிஜவாழ்வியல், நடப்பியல், உள்ளது உள்ளபடியே கூறுதல் என்னும் சொற்களால் கூறலாம். நடப்பியல் குறித்து தமிழ் நாடன் கூறுவது 'எதார்த்தவியல் மனித அறிவுக்கு இயல்பாகப் புலனாவதை உண்மையாகச் சித்திரிக்கும், வர்க்க முரண்பாடுகளை விவரித்து வாசகனைக் கிளர்ந்தெழத் தூண்டும் அல்லது தள்ளத் தக்கது கொள்ளும். அலங்காரம் தவிர்க்கும். மனிதனே முதன்மை விவரிப்பு, காரண காரிய முறைப்பாட்டோடு இருக்கும். அறிவியல் பார்வையோடு ஆய்வை வளர்க்கும். மக்கள் ஆற்றலை முதன்மைப் படுத்தும். எதார்த்தவாதம்

மார்க்சிய லெனினியத்தின் மறுபக்கம்'' என்றும் தமிழ்நாடன் கூற்று இங்கே நோக்கத்தக்கவையாகின்றது.

நாஞ்சில் நாடனின் நாவல்களைக் கூர்ந்து படிப்பவர்களுக்கு நடப்பியல் தன்மை புலப்படும். நடப்பியல் கூறுகள் இங்கே எடுத்துரைக்கப்படுகின்றன.

நடப்பியல் படைப்பாளர்கள் காப்பியப் பாத்திரங்களைப் போல் அல்லாமல் சராசரி மனிதர்களையே பாத்திரங்களாகப் படைத்திருப்பதை அறியமுடிகின்றது. ஒரு சிறந்த படைப்பைப் படைத்துக் கொடுக்கிற படைப்பாளி அதன் மூலம் சமூக மாற்றத்தை நிகழ்த்துவான் என்பதை செந்தில்நாதன் கூற்று இங்கே உறுதிப்படுத்தப்படுகின்றது. அவை 'ஒரு எழுத்தாளன் சமூகத்தில் தனக்கு கிடைத்த அனுபவத்தின் சகல அம்சங்களையும் பல்வேறுபட்ட கதாபாத்திரங்களின் மூலமாக வெளிப்படுத்தவும், சமுதாய வளர்ச்சிப் போக்கின் புரட்சிகரமான மாறுதல் கட்டத்தைச் சுட்டிக் காட்டி அதற்கான இலக்கியச் சேர்க்கையின் போராட்ட உணர்வுகளைத் தட்டி எழுப்புவதுமான பணிகளைத் தன் சுய நோக்கில் சித்திரித்துக் காட்டக் கிடைத்த சிறந்த கலையாயுதம் ஆகுமிது..'' என்றக் கூற்றிற்கேற்ப நாஞ்சில் நாடன் தனது நாவல்களில் 'தலைகீழ் விகிதங்கள்' என்றும் நாவலில் சிவதாணு என்னும் பாத்திரமும், 'மிதவை' நாவலில் சண்முகம் பாத்திரமும், 'எம்பிலதனை வெயில் காயும்' நாவலில் சுடலையாண்டி போன்ற பாத்திரங்களின் மூலமாகப் பட்டதாரி இளைஞர்களின் போராட்ட வாழ்க்கை உணர்வுகளை நடப்பியல் தன்மையோடு அனுபவ ரீதியில் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

சமூகப் பொருளாதாரக் காரணங்களால் மனித சமுதாயம் பாதிக்கப்படுகின்றது என்பதை ஆய்வதே நடப்பியல் என்பதாகும். ''மனிதன் தன்னுடைய குடும்பம், வர்க்கம், சூழநிலை ஆகியவைகளைச் சார்ந்தே சமூகப் பொருளாதாரக் காரணிகளால் பாதிக்கப்படுகின்றான் என்று காண்பது நடப்பியல் ஆகும்'' என்னும் சி.கனகசபாபதியின் கருத்திற்கேற்ப மாமிசப் படைப்பு என்றும் நாவலைப் படைத்துள்ளார் என்பதை கீழ்வண்டவற்றிலிருந்து அறியப் பெறலாம்.

''பயக்கோ வாழைத் தோட்டம் எப்படிப் போட்டிருக்காம்ணு அத்தான் பார்த்தேளா?

பாத்தேன்.... ஊக்கம் உள்ளவன் தான் கந்தையா மத்த பயக்களை மாதிரி இல்லே...

நானும் முதல்லே தோட்டத்தை அழிச்ச உடனே இந்தால ஒஞ்ச போயிருவாம்ணுதான் நினைச்சேன்...'' என்பன பொருளாதார ஏற்றத் தாழ்வுகளினால் பாதிப்படைகின்ற நடுத்தர விவசாயக் கூலி தொழிலாளர்களின் நடப்பியல் நிலையினைச் சித்திரிக்கின்றன.

படைப்பாளி தொழிலாளர்களின் மீதுள்ள கரிசனத்தையும், வர்க்கப் பிரச்சனையை நாவல்களில் பல இடங்களில் நாஞ்சில் நாடன் முதன்மைப் படுத்தி உள்ளமையும் அறியமுடிகிறது.

சாதியச் சிக்கல் நடப்பியல் சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது என்பதை நாவல்களின் வழி நாஞ்சில் நாடன் கூறுகிறார். இதனை ''எங்க பயலுவோ யாரையாவது தொட்டிருக்கணும். செறுக்கி பிள்ளைகளைக் குத்திக் கொலை சாச்சிருப்போம்.....'' என மாணவ சமுதாயத்திடமுள்ள சாதிய நிலைப்பாட்டினை வெளிப்படையாக புலப்படுத்தியுள்ளார்.

பம்பாயில் நடைபெறும் விபச்சார நடப்பியல் நிலையினைக் கூறி அதனை வன்மையாகக் கண்டிப்பதனையும் நாவல்களின் வழி சமுதாயச் சீர்த்திருத்தத்தை ஏற்படுத்தியுள்ளார் நாஞ்சில் நாடன். இதனை ''எனக்கு ஃபிரண்டு ஒருத்தன்... சவூதியிலே... சொந்த ஊரு குறிஞ்சிப்பாடி பம்பாயிலே ஒரு நாள் தங்கி நல்ல அனுபவிச்சுக்கிட்டுத்தான் ஊருக்குப் போவாரு...'' என்று சதுரங்கக் குதிரை நாவலில் நாராயணனிடம் பூலிங்கம் கூறுவதாகக் காட்டுகிறார். இதனை முரண்பட்டு நாராயணன் என்ற பாத்திரம் ''ஏன் பொண்டாட்டி இப்பிடி நெனைச்சா விடுவியாடா நீ?'' என்று கூறுவதன் மூலம் சமூக சீர்திருத்தம் நடப்பியலில் பேசப்படுவதை உணரலாம்.

தா.வே.வீராசாமியின் கூற்றிற்கேற்ப ''வாழ்க்கையில் தொடர்ந்து ஆற்றொழுக்காக நடைபெறும் நிகழ்ச்சிகளின் நடப்பு நிலையை உள்ளது உள்ளபடியே இலக்கியத்தில் வடித்துத் தரும் பொழுது அது நடப்பியல் நாவல் வகையாக அமைகிறது.'' இக் கருத்திற்கேற்பப் பம்பாய் நகரின் குடிசை வாழ் மக்களுடைய வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே 'மிதவை' நாவலின் வழியாக படைத்துக் காட்டியுள்ளார். ஆசிரியர் இதனை

"மழைக்காலத்தில் அங்கெல்லாம் நிறையத் தண்ணீர் தேங்கும். ......... குடிசை வாசலில் கூடக் குளம் போலத் தண்ணீர் கெத்துக் கெத்தென்று தேங்கும். துளும்பும், அப்போது வெளிக்குப் போக என்ன செய்வார்கள்?......... பேப்பரை பரத்தீ வீட்டுக்கு உள்ளேயே வெளிக்கிலிருந்து ஆளனக்கம் இல்லாத நேரத்திலே வெளீல எறிஞ்சிட்டு வருவா தெரியுமா?" என்ற காமாட்சி கதைமாந்தர் கூற்றின் மூலம் நடப்பியலை உள்ளது உள்ளவாறு வெளிப்படுத்துவதை அறியமுடிகிறது.

"நடப்பியல் என்பது அன்றாட வாழ்வில் எந்தவிதப் புனைவுமின்றி உள்ளது உள்ளபடி இலக்கியத்தில் கூறும் முறை ஆகும்" என்று தா.வே. வீராசாமியின் கூற்றிற்கேற்ப தலைகீழ் விகிதங்கள் என்னும் நாவலில் சிவதாணுவின் இளைமைப் பருவத்தின் வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே நாஞ்சில் நாடன் விவரித்துள்ளார். சிவதாணுவை மாப்பிள்ளை பார்க்க வந்துவிட்டுச் சென்றவுடன் அவன் எந்த முடிவும் எடுக்க முடியாமல் தவிக்கும் நிலையிணை உள்ளது உள்ளபடியே படைத்துக்காட்டியுள்ளார். "... மெதுவாகத் தெருவில் இறங்கி ரோட்டை அடைந்து பாறை ஆற்றை நோக்கி நடந்தான். சிந்தனையில் புகுந்த கனம் அவன் நடையில் இறங்கி அழுத்தியது..." என இளைஞர்களின் நடப்பியல் நிலையினை உளவியல் அடிப்படையில் படைத்துள்ளார்.

நாஞ்சில் நாடனின் நாவலின் நடப்பியல் தன்மைக்கு மேலும் வலுவூட்ட அவ்வட்டார பேச்சு வழக்கிலேயே படைக்கப்பட்டுள்ள தன்மையாகும். "ஏ சிதம்பரம்! கச்சிக்காரன் முருங்கக் கொள நொறிச்சுக்கிட்டு போறான் பாத்தியா?

சவத்துக்குப் பொறந்த பய ரெண்டு உப்புப் போட்டு அவிச்சுத் திம்பான் அடுக்காளையிலேயிருந்து சாப்பிடுக பயதாலா...." என நடப்பியல் தன்மையில் இயல்பாய் அமையும் வண்ணம் வட்டார வழக்கு பேச்சு மொழி நடையினைக் கையாண்டுள்ளார். கதைப் போக்கிற்கேற்ப ஆங்கிலம், இந்தி, மலையாளம் போன்ற கலப்பு மொழி நடையினைப் பயன்படுத்தியுள்ளார்.

இவற்றிலிருந்து நாஞ்சில் நாடன் தனது நாவல்களை நடப்பியலின் பண்பிற்கேற்ப படைத்துள்ளார் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

# ஓரெழுத் தொருமொழி

*ஆறுவிரல் ஐம்பொறி*
வீரசோழபுரம்

செந்தமிழாம் தமிழ் மொழியில் ஓர் எழுத்து தன்னை உணர்த்தி நின்ற வழி எழுத்தாம். அதே எழுத்து பொருள் உணர்த்தின் சொல்லாம். 'நே' என்ற எழுத்து உயிர்மெய் நெடிலை உணர்த்திய வழி எழுத்தாம். அதே எழுத்து அன்பு என்ற பொருள் உணர்த்தின் சொல்லாம்.

*எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்*
*பதமாம்* —நன்னூல் - 128

பொருள் உணர்த்தும் ஓர் எழுத்தை ஓரெழுத் தொருமொழி (ஓரெழுத் தியல் பதம்) என்று நன்னூல் நவில்கிறது. தமிழ் மொழியில் நாற்பத்திரண்டு (ஆறேழ்) ஓரெழுத்துக்கள் பொருள் உணர்த்தி நிற்கின்றன என்பதை நன்னூல் 129ஆம் நூற்பா தொகுத்து மொழிகிறது.

*உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்*
*கவசவி னாலும் யவ்வி லொன்று*
*மாகு நெடினொது வாங்குறி லிரண்டோ*
*டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின*

**உயிர்மவி லாறு - உயிரில் 6. மகர வர்க்கத்தில் 6.**

1. ஆ. - பசு. 2. ஈ - பூச்சி. 3. ஊ - ஊன். 4. ஏ - அம்பு.
5. ஐ - ஐந்து, ஐயம், அரசன், அழகு 6. ஓ - மதகுநீர் பலகை

1. மா - விலங்கு 2. மீ - மேல் 3. மூ - முதுமை
4. மே - மேம்பாடு 5. மை - முகில் 6. மோ - முகர்

***தபநவி லைந்து தகர - பகர - நகர வர்க்கத்தில் ஒவ்வொன்றிலும் ஐந்து***

1. தா - கேடு 2. தீ - நெருப்பு 3. தூ - தூய்மை 4. தே - கடவுள்
5. தை - ஒரு மாதம்

1. பா - பாட்டு 2. பூ - மலர் 3. பே - அச்சம் 4. பை - பசுமை
5. போ - ஏவல்

1. நா - நாக்கு 2. நீ - முன்னிலை 3. நே - அன்பு 4. நை - இகழ்ச்சி
5. நோ - துன்பம்

*கவசவி னாலு - ககர, வகர, சகர வர்க்கத்தில் ஒவ்வொன்றிலும் நான்கு*
1. கா - சோலை, காவடி 2. கூ - பூமி 3. கை - கரம், சிறுமை 4. கோ - அரசன்
1. வா - ஏவல் 2. வீ - பறவை 3. வை - கூர்மை, வைக்கோல்
4. வெள - ஒலிக்குறிப்பு
1. சா - இறப்பு 2. சீ - இகழ்ச்சி 3. சே - சிவப்பு 4. சோ - மதில்

*யவ்விலொன்று - யகர வர்க்கத்தில் ஒன்று - யா - ஐயம்.*

*நொது வாங்குறில் - குறில் எழுத்தில் இரண்டு - நொ - நோய் து - அசைத்தல்*

இந்நாற்பத்திரண்டும் சிறப்பினவாம். ஆதலால் சிறப்பில்லன சில உள என்பதை அறியலாம் சிறப்பில்லன சிலவற்றை காணலாம்.

| | | |
|---|---|---|
| 1. கு - விலங்கு ஓட்டும் ஓசை | 2. கீ - கிளக்குரல் | 3. க - தலை |
| 4. ஓ - ஒழிதல் | 5. கு. பூமி | 6. கௌ - பற்றுதல் |
| 7. சு - சுகம் | 8. நூ - ஆணி | 9. பீ - மலம் |
| 10. வே - வேவு | 11. பு - அடுப்பின் பின்பக்கம் | |

தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களை நோக்கும் போது திருக்குறளில் மட்டுமே ஓரெழுத்தொரு மொழிகள் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம். அவற்றைத் தொகுப்பின் எஞ்சும். ஆதலால் ஓரெழுத் தொருமொழிகள் அமைந்துள்ள சில குறட்பாக்களை ஈண்டு காணலாம்.

| | | |
|---|---|---|
| ***ஆ** பயன் குன்றும் - 56* | ***ஆ** விற்கு நீரென்று - 1066* | ***ஐ** யுணர்வு எய்திய - 354* |
| *என்**ஐ** முன் நில்லன் - 771* | *சிறு**கை** அளாவிய - 64* | *பிறன்**கை**ப்பொருள் - 178* |
| ***தீ**யினும் அஞ்சப்படும் - 202* | ***தீ**யெச்சம் போல - 674* | ***நா** நலம் என்னும் - 641* |
| ***நா** காக்க - 127* | ***சே**யிழை மாட்டு - 1110* | *பாவாய்**நீ** - 1123* |
| *ஆக**நீ** - 1242* | ***நோ** நொந்து - 157* | *கோட்டுப்**பூ** - 1313* |
| *கல்லா**மா** - 314* | *கவரி**மா** - 969* | ***மீக்**கூறும் - 386* |
| *பெருந்தக்க**யா**வுள - 54* | ***யா**காவ ராயினும் - 127* | ***வை**த்தூறு போல - 435* |

ஓரெழுத்துதானே என்று இகழ்ந்து இச்சொற்களை நாம் விலக்கி விடக் கூடாது. நமது படைப்புகளில் ஓரெழுத்து ஒரு மொழிகளை மிகையாகப் பயன்படுத்தி அப்பதங்கள் இறந்து போகாமல் காப்போமாக.

# ஆழ்வார்ப் பாசுரங்களில் திருக்குருகூர்

*முனைவர் மு. மீனா*

பன்னிரு ஆழ்வார்கள் படைத்த நாலாயிர திவ்விய பிரபந்தப் பாசுரங்கள் அனைத்தும் சொல்வதற்கும் கேட்பதற்கும் இனிமை வாய்ந்தனவாகும். இறைவன் மேவி அருள்புரியும் தலங்கள் திவ்ய தேசங்கள் என்றும், திருத்தலங்கள் என்றும் போற்றப்படுகின்றன. 108 திவ்விய தேசங்களில் திருக்குருகூர் என்னும் பாண்டிய நாட்டுத் திருத்தலத்தின் சிறப்பை ஆழ்வார் பாசுரங்கள் வழி எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## தலத்தின் இருப்பிடம்

பாண்டிய நாட்டு நவதிருப்பதிகளுள் ஒன்று திருக்குருகூர். இத்தலம் திருநெல்வேலி திருச்செந்தூர் மார்க்கத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| தலத்தின் மூலவர் | - | ஆதிப் பிரான் (ஆதிநாதன்) நின்ற திருக்கோலம் |
| உத்ஸவர் | - | பொலிந்து நின்ற பிரான் |
| தாயார் | - | ஆதிநாதவல்லி<br>குருகூர்வல்லி<br>இருவரும் தனித்தனி சந்நிதிகளில்<br>சேவை சாதிக்கின்றனர் |
| தீர்த்தம் | - | பிரம்ம தீர்த்தம், தாமிரபரணி நதி |
| விமானம் | - | கோவிந்த விமானம் |
| தலவிருட்சம் | - | புளிய மரம் |

## தலத்தின் வேறுபெயர்கள்

தலத்தின் பழமையான பெயர் திருக்குருகூர். (தற்போது இத்தலம் ஆழ்வார் திருநகரி என்றழைக்கப்படுகிறது. இத்தலத்தில் அவதரித்த

நம்மாழ்வார் திருப்புளிய மரத்தின் அடியில் தங்கி ரிக், யஜூர், சாம, அதர்வன வேதங்களின் சாரமாக முறையே திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரியதிருவந்தாதி ஆகியவற்றை அருளிச் செய்ததால் ஆழ்வார் திருநகரி என்றழைக்கப்படுகிறது.

பிரம்மனுக்குத் திருமால் குருவாக நின்று 'குருகாத்தர மதர்ச்சனம்' என்னும் மறைப்பொருளை இவ்விடத்தில் உபதேசம் செய்ததால் குருகூர் என்று பெயர் பெற்றது என்பர்.

குருகு என்னும் சங்கு மோட்சம் பெற்றதால் குருகூர் என்றழைக்கப்பட்டதாகவும் குறிப்பர்.

மேலும் இத்தலத்திற்கு தாந்த க்ஷேத்திரம், சேவி க்ஷேத்திரம், வராக க்ஷேத்திரம், தீர்த்த க்ஷேத்திரம் ஆகிய வேறு பெயர்களும் உண்டு.

**தலத்தின் சிறப்பு**

பன்னிரு ஆழ்வார்களுள் சிறப்பு மிக்கவராகக் கருதத்தக்கவர் நம்மாழ்வார். அவர் அவதரித்த தலம் திருக்குருகூர்.

சேரநாட்டுத் திருத்தலங்களுள் ஒன்றான திருவண்பரிசாரம் என்ற தலத்தில் பிறந்த உடைய நங்கை என்பவர் இவரது தாயார். திருக்குருகூர் தலத்தில் பிறந்த காரியார் இவரின் தந்தையாவார். மணம் முடித்து பல ஆண்டுகள் ஆகியும் புத்திரப்பேறு கிடைக்கப்பெறாததால் இவர்கள் திருவண்பரிகாரப் பெருமாளை (திருவாழ்மார்பன்) வணங்கி 41 நாட்கள் கடும் விரதம் இருந்து வாமனஜெயந்தி அன்று பெருமானுக்கு ஊஞ்சல் உத்சவம் நடத்தினர். பின்னர் திருக்குறுங்குடி தலத்திற்கு வந்து இறைவனைத் தொழுததன் பயனாக நம்மாழ்வார் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் கடக லக்னத்தில் வெள்ளிக்கிழமை அவதரித்தார். ஆழ்வார்களில் நம்மாழ்வார் ஒருவருக்கு மட்டுமே பிறப்பு, நட்சத்திரம், லக்னம் முதலான அனைத்துக் குறிப்புகளும் ஆறாயிரப்படி குருபரம்பரை நூல்களில் காணப்படுகின்றன.

இந்தக் குறிப்புகளின் அடிப்படையில் கோபிநாத்ராவ் அவர்களால் ஆழ்வாரின் பிறந்த தேதி 04.05.798 என்று கணிக்கப்பட்டது என்று தேவராஜன் குறிப்பிடுகிறார். சடகோபன், மாறன், வகுள மார்பன் ஆகிய பெயர்கள் நம்மாழ்வாருக்குண்டு.

### விழாக்கள்

திருக்குருகூரில் வைகாசி விசாகப் பிரமோற்சவம் 10 நாட்கள் திருவிழாவாகக் கொண்டாடப்படும். அப்போது அவ்வூரே திருவிழாக்கோலம் கொள்ளும். பூப்பல்லக்கு, கருடசேவை, திருமஞ்சன நீராட்டு முதலியவை குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். அவற்றுள் திருவிழாவின் 5ஆம் நாள் வைகாசி விசாகத்தன்று கருடசேவை நடைபெறும். இவ்விழா தனிச்சிறப்பு மிக்க விழாவாகும். நவதிருப்பதியிலுள்ள பெருமாள்கள் (திருக்குருகூர் ஆதிப்பிரான் தவிர்த்து) தத்தம் கருடவாகனத்தில் வந்து, கோவிலுக்கு அருகாமையில் உள்ள மண்டபத்தில் வந்து தங்குவர். நம்மாழ்வார் அன்னவாகனத்தில் வந்து அனைவரையும் எதிர்கொண்டழைப்பார். மதுரகவியாழ்வார் பல்லக்கில் வருவார். 9 பெருமாள்களும், 2 ஆழ்வார்களும் கலந்துகொள்ளும் கருடசேவை நிகழ்ச்சி தனிச்சிறப்பாக அமையும். அன்று மாலை திருமஞ்சன விழா நடைபெறும். திருக்குருகூர் கோவில் வளாகத்தில் அருகருகே அமைக்கப் பெற்றுள்ள மண்டபங்களில் அனைத்துப் பெருமாளுக்கும் நம்மாழ்வாருக்கும் ஒரே நேரத்தில் திருமஞ்சனம் நடைபெறும்.

இவ்விழா தவிர்த்து, திருவரங்கத்தைப் போலவே இங்கும் மாதந்தோறும் ஆழ்வார்களின் திருநட்சத்திரம் கொண்டாடப்படுகிறது. இத்தலத்திலும் அரையர் சேவை நடைபெறுகிறது. திருமஞ்சனத்தின் போது பிரபந்தம் தாளத்துடன் பாராயணம் செய்யும் முறையும் வழக்கிலுள்ளது.

### நம்மாழ்வாரின் மங்களாசாசனப் பாசுரங்கள்

திருக்குருகூர் தலத்தை நம்மாழ்வார் மட்டுமே மங்களாசாசனம் செய்துள்ளார். 11 பாசுரங்களில் இது அமைந்துள்ளது. திருக்குருகூர் தலத்தைச் சிறப்பிக்கும் 11 பாசுரங்களும் இசைப்பாவாக அமைந்துள்ளன. நாட்டம் என்னும் பண்ணில் ஏழொத்து தாளத்தில் பாடப்பெறுவதாக இப்பாசுரங்கள் இயற்றப் பெற்றுள்ளன. மேலும் இவை அந்தாதித் தொடையிலும் அமைந்துள்ளன.

நான்கடி கொண்டமைந்த திருக்குருகூர்ப் பாசுரமானது அமைப்பில் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலிரு அடிகள் ஸ்ரீமந் நாராயணனாகிய ஆதிப்பிரானின் வல்லமையை எடுத்துரைப்பதாக

அமைந்துள்ளன. மூன்றாம் அடி திருக்குருகூரின் வளத்தையும் செல்வச் சிறப்பையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

நான்காம் அடி, மக்கள் உய்யும் வழியைப் புகட்டும் மார்க்கமாக அமைந்துள்ளது.

இதனடிப்படையில் திருக்குருகூர்ப் பாசுரச் செய்திகள் மூன்று பிரிவுகளில் இங்கு ஆராயப்படுகின்றன.

## 1. நம்மாழ்வார் காட்டும் இறைவனின் வல்லமை.

இறைவனின் வல்லமையையும் புகழையும் மேன்மையையும் எடுத்துக்காட்டுவதாக முதற்பகுதி அமைந்துள்ளது.

## இப்பகுதி வாயிலாக நம்மாழ்வார் வலியுறுத்தும் கருத்துக்கள்

நான்முகன், சிவன் முதலான பிற தெய்வங்கள், தேவர்கள், ஈரேழ் உலகங்கள், உயிரினங்கள் அனைத்தையும் படைத்தவர் ஸ்ரீமந்நாராயணன் என்பதை நம்மாழ்வார் வலியுறுத்துகிறார்.

இதனை,

*'ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதும் இல்லா*
*அன்று நான்முகன் தன்னொடு தேவர்*
*உலகோடு உயிர் படைத்தான்'* *(பாசுரம். 2513)*

என்றும்,

*'நாடி நீர் வணங்கும் தெய்வமும்*
*உம்மையும் முன்படைத்தான்''* *(2514)*

என்றும்,

*'பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து* *(2515)*

என்றும் தம் பாசுரங்களில் வெளிக்காட்டியுள்ளார்.

2) தன்னால் படைக்கப்பட்டவர்களைக் காக்கும் வல்லமை படைத்தவரும் பெருமானே என்பதையும் பாசுரங்கள் புலப்படுத்துகின்றன.

ஊழிக் காலத்தின் போது தெய்வங்கள், தேவர்கள் உள்ளிட்ட அனைத்து உயிர்களையும் காப்பதற்காக, அனைத்தையும் விழுங்கி, தன்னுள்ளே அடக்கி வைத்து, ஊழிக்காலம் நிறைவுற்றபின் அதனை உமிழ்ந்து மீண்டும் உயிர்தழைக்கச் செய்தவர் என்பதை,

*'.........அன்று உடனே விழுங்கி கரந்துமிழ்ந்து கடந்திருந்தது'*
(2515)

என்று குறிப்பிடுகிறார்.

3) பிரம்மா, சிவன் முதலான தேவர்கள், மனிதர்கள் அனைவருக்கும் நாயகனாகத் தலைவனாக விளங்குபவர் அவரே என்று பரமனின் புகழை,

*'பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும்*
*நாயகனவனே.....'' (2516)*

என்ற அடிகளின் வாயிலாகப் புலப்படுத்துகிறார்.

4) தெய்வங்களுக்கு மட்டுமின்றி அனைத்துச் சமயத் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் முழுமுதற் தெய்வமாக விளங்குபவன் என்பதை,

*'இலிங்கத்திட்ட புராணத்திரும் சமணரும் சாக்கியரும்*
*வலிந்து வாது செய்வீர்களும் மற்று நும்*
*தெய்வமுமாக நின்றான்''*

என்றும் சுட்டுகின்றார்.

5) முப்பெருந் தெய்வங்களுள் ஒருவராகப் பக்தர்களால் போற்றிப் பரவப்படும் சிவபெருமானின் அருளிச் செயல்களுக்கும் மூலகாரணமாக நின்றவர் ஸ்ரீமந் நாராயணனே என்பதை 2 பாசுரங்களில் நம்மாழ்வார் எடுத்தியம்புகிறார்.

முற்காலத்தில் பிரம்மனுக்கு ஐந்து தலைகள் இருந்தன. படைப்புக் கடவுள் என்று கர்வம் கொண்ட பிரமனின் ஐந்து தலைகளுள் ஒன்றனைச் சிவபெருமான் கொய்து எடுத்தார். அது முதற்கொண்டே பிரம்மன் நான்முகனாகக் காட்சியளிக்கிறார். ஆனால், பிரம்மனின் தலையைக் கொய்த சிவனால், அதனை அழிக்க இயலவில்லை. அத்தலையானது, சிவபெருமானின் கைகளிலேயே கபால ஓடாகத் தங்கியது. பின்னர் கருணை கொண்ட நாராயணன் அக்கபாலத்தில் பிச்சையிட அது உடனே மறைந்தது.

*'கபால நன் நோக்கத்துக் கண்டு கொண்மின்'* 2516

என்று இதனை நம்மாழ்வார் எடுத்தியம்புகிறார்.

அதுபோலவே மார்க்கண்டேயனின் வாழ்நாள் பதினாறு ஆண்டுகள் என்று கணிக்கப்பட்டதை அறிந்த மார்க்கண்டேயன் சிவபெருமானைத் தொழுது, தன் உயிரைக் காக்க வேண்டினார். அப்போது ஸ்ரீமந் நாராயணனின் அருளால் சிவபெருமான் எமதர்மனிடமிருந்து மார்க்கண்டேயனைக் காத்தார் என்பதும் ஐதீகமாகும். அப்புராணச் செய்தியை,

*'புக்கடிமையினால் தன்னைக் கண்ட*
*மார்க்கண்டேயனவனை*
*நக்கபிரானும் அன்றுய்யக் கொண்டது*
*நாராயணன் அருளே'*

என்ற பாசுரத்தில் வெளிக்காட்டுகிறார்.

தெய்வங்கள், தேவர்கள் மற்றும் அனைத்து உயிர்களையும் படைத்தவன்; காப்பவன், அருள்பவன், நாயகன், ஒப்பற்ற மூர்த்தி ஆகிய சிறப்புக்களின் அடிப்படையில், இம்முதற் பகுதியின் வாயிலாக 'திருமாலே பரம்பொருள்' என்ற உண்மைத் தத்துவம் நம்மாழ்வாரால் உணர்த்தப் பெறுகிறது.

மேலும் பெருமாள் ராமானுஜம் என்பவர் பரமாத்ம விவேகம் என்ற ஆய்வு நூலை எழுதியுள்ளார். அவர் வடமொழியைச் சார்ந்த வேதம், இதிகாசம், புராணம் ஆகியவற்றின் சான்றுகளோடு சங்க இலக்கியப் பரிபாடல், திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதல் இன்றைய தமிழ்ப் பாகவத புராணங்களிலிருந்து சான்றுகளையும் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்து 'திருமாலே பரம்பொருள்' என்பதை நிறுவியுள்ளார். இந்த முழுமையான ஆய்விற்கு நம்மாழ்வாரின் பத்துப் பாசுரங்கள் மட்டுமே போதுமான பொருத்தமான சான்றாக அமைவது நம்மாழ்வாரின் ஆழங்கால் பட்ட வைணவ உணர்வுச் சிறப்பைக் காட்டுவதாக அமைகிறது.

### திருக்குருகூரின் வளமும் சிறப்பும்

திருக்குருகூர் தலப்பாசுரங்களின் இரண்டாம் பகுதியானது திருக்குருகூரின் வளம் மற்றும் சிறப்பினை வெளிக்காட்டுகிறது. திருக்குருகூர் நீர் வளமும் நில வளமும் செல்வ வளமும் நிறைந்து காணப்படும் தலமாக விளங்குகிறது.

*'குன்றம் போல் மணிமாடம் நீடு திருக்குருகூர் (பா. 2513)*

*'மாடமாளிகை சூழ்ந்தழகாய திருக்குருகூர் (பா. 2514)*

*'தேசமா மதின் சூழ்ந்தழகாய திருக்குருகூர் (பா. 2516)*

என்று மூன்று பாசுரங்கள் திருக்குருகூரின் செல்வ வளத்தை வெளிப்படுத்துகின்றன.

*'மலிந்து செந்நெல் கவரி வீசும் திருக்குருகூர்' (பா. 2517)*

*'சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கும் திருக்குருகூர் (பா. 2518)*

*'கொக்கலர் தடந்தாழை வேலித் திருக்குருகூர்' (பா. 2520)*

*'வளங்கொள் நண்பனை சூழ்ந்தழகாய திருக்குருகூர் (பா. 2521)*

*'செறுவில் செந்நெல் கரும் பொடோங்கு திருக்குருகூர் (பா. 2522)*

ஆகிய ஐந்து பாசுரங்களின் வழி திருக்குருகூர் நெல், கரும்பு, கமலம், தாழை, பனை வளம் நிறைந்த தலமாக அமைந்துள்ளது புலப்படுகிறது.

எவ்வாறு ஆழ்வார் திருக்குருகூர் வளம் குறித்து பேசுகிறாரோ, அதன் வழியிலேயே அவரது சீடராகிய மதுர கவியாழ்வாரும் திருக்குருகூரின் செழிப்பைக் காட்டுவது இணைந்து நோக்கி இன்புறத்தக்கது.

*தென்குருகூர் (937)*

*வண் குருகூர் (939)*

*செம்பொன் மாடத்திருக்குருகூர் (941)*

*குன்ற மாடத் திருக்குருகூர் (942)*

என்று மதுரகவியாரின் பாசுரங்கள் சுட்டுகின்றன. ஆனால் நம்மாழ்வார் திருக்குருகூரை ஆதிப்பிரானின் அருள் நிறைந்த தலமாகக் காட்ட, அதற்கு மாறுபட்டு மதுரகவியாழ்வார் நம்மாழ்வார் அவதரித்த தலம் என்று தன் குருவை மையப்படுத்திப் பரவுகின்றார்.

ஆதிப்பிரான் மேவிய தலமாகத் திருக்குருகூர் இருப்பதாலேயே அத்தலம் நீர்வளம், நிலவளம், செல்வச் செழிப்பு நிறைந்ததாகக் காணப்படுகிறது என்பதையே நம்மாழ்வாரின் பாசுரங்கள் உட்கருத்தாகக் கொண்டுள்ளன.

**மக்கள் உய்யும் வழி**

திருக்குருகூரின் முதல் பத்துப் பாசுரங்களின் கடைசி அடிகள் மக்களின் நடைமுறை வாழ்க்கையைச் சுட்டி, துன்பம் நல்கும் மனிதப்பிறவியிலிருந்து மக்கள் உய்யும் வழியைக் காட்டுகின்றன.

பூவுலகில் வாழும் மக்கள் ஸ்ரீமந் நாராயணனை மறந்து, பிற தெய்வங்களை நாடுபவர்களாகவும் (2513, 2520) ஈசன் பால் அவம் பேசுபவராகவும் (2516) திகழ்கிறார்கள். அவர்கள் அனைவரும் சிவபெருமானை,

*'பாடியாடிப் பரவிச் செல்லவேண்டும்' (2514)*
*பரமனைத் தவிர வேறு தெய்வமில்லை (2515)*

என்பதை உணர்ந்து திருமாலைப் போற்றிப் பரவுதல் வேண்டும் என்றும், இப்பிறவியிலிருந்து மீள்வதற்கு அவனைச் சரணடைவது ஒன்று மட்டுமே உய்யும் வழியாகும் என்றும் சுட்டுகிறார்.

*'ஆதிமூர்த்திக்கு அடிமை புகுவதுவே' 2519*

*'குறியமாணுருவாகிய நீள்குடக்*
*கூத்தனுக்கு ஆட்செய்வதே' 2522*

*'ஆற்றவல்லவன் மாயம் கண்டீர் அது*
*அறிந்தறிந்து ஓடுமினே' 2518*

என்ற மூன்று பாசுரங்களின் வாயிலாகச் சரணாகதி தத்துவத்தை வலியுறுத்துகிறார்.

வைணவச் சடங்கு முறைகளில் முக்கியமானதாகக் கருதப்படும் சரணாகதி தத்துவத்தை நம்மாழ்வார் மக்கள் உய்யும் வழியாகப் புகட்டுகிறார்.

இதற்கு முத்தாய்ப்பாக,

*'ஆட்செய்து ஆதிப்பிரானைச் சேர்ந்தவன்*
*வண்குருகூர் நகரான்*
*நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன்*
*வேட்கையால் சொன்ன பாடல் ஆயிரத்துள்*
*இப்பத்தும் வல்லார்*
*மீட்சியின்றி வைகுந்த மாநகர் மற்றது கையதுவே'*

என்று திருவாய்மொழிப் பாசுரங்களுள் மேற்காட்டப்பட்ட 10 பாசுரங்களைச் சேவிக்க வல்லவர்கள் பரமபதத்தை அடைவார்கள் என்று பாசுரப்பலனையும் நம்மாழ்வார் எடுத்தியம்புகின்றார்.

## நிறைவுரை

1. திருக்குருகூர்ப் பாசுரங்கள் எல்லாத் தேவர்களுக்கும் மேலான எம்பெருமானே ஆதிப்பரம்பொருள் என்ற உண்மைத் தத்துவத்தை நிலைநிறுத்தும் சான்றாக அமைகின்றன.

2. இறையருள் ஒன்றே உலக வாழ்க்கைக்குத் தேவையான நீர், நிலம் மற்றும் செல்வ வளத்தைத் தரவல்லது என்பது வலியுறுத்தப் பெற்றுள்ளது.

3. *'ஓடியோடிப் பலபிறப்பும் பிறந்து*
*மற்றோர் தெய்வம்*
*பாடியாடிப் பணிந்து பல்படிகால்*
*வழியேறி'*

மானிடப்பிறவியில் துயருறும் மனிதர்கள் பரமபதம் அடைவதற்குப் பரம் பொருளிடத்துச் சரணாகதி அடைவது ஒன்றே வழி என்னும் உண்மைத் தத்துவம் மற்றும் ஆன்மிக வழியைக் காட்டுவதாக நம்மாழ்வாரின் திருக்குருகூர்ப் பாசுரங்கள் திகழ்கின்றன.

மாயக்கண்ணன் தன் கனிவாயில் பூவுலகு முழுவதையும் காட்டியது போல், நம்மாழ்வாரின் 10 பாசுரங்கள் வைணவத் தத்துவத்தின் சாரத்தை உள்ளடக்கித் திகழ்கின்றன.

# ஊரக வளத்தை விரிவுபடுத்துதல் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குதல்

– பாரதப் பிரதமர் உரை – செப்.9, 2009




### சீர்திருத்தப் பணிகளுக்கு முக்கியத்துவம்

இந்தியாவின் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் நமது மக்களுக்கு வாழ்வாதார பாதுகாப்பை அளிப்பது மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்குதல் போன்ற முக்கியப் பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதற்காக கூட்டப்பட்டுள்ள மாநிலங்களின் ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர்களின் இந்த முக்கிய மாநாட்டில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். முக்கியமான கால கட்டத்தில் இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கும் நமது ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு சி.பி.ஜோஷி அவர்களை நான் பாராட்டுகிறேன். நாம் கடந்த ஐந்தாண்டுகளாக தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம். இதிலிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதில் பல வெற்றிகரமான அம்சங்கள் உள்ளன. நாட்டின் சில பகுதிகளில் இதன் செயல்பாடு மாறுபட்டதாக அமைந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் நாம் பெற்ற அனுபவத்திலிருந்து சரியான பாடத்தைக் கற்று, அதன் மூலம் நமது கிராமப்புற மக்களின் நியாயமான விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

## கிராமப்புற மக்களின் துயரத்தைக் குறைத்தல்

நமது நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிர்ஷ்டவசமாக பருவ மழை பெய்யத் தொடங்கியுள்ள நேரத்தில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். கடந்த வாரத்தில் பெய்த மழை குறுவைப் பயிர்களுக்கு நன்மை பயக்கும் என்பதால் நமது விவசாயிகளிடையே அது பெரும் உற்சாகத்தை அளித்துள்ளது. எனினும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குறைவான அளவே மழை பெய்யும் என்பதால் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள கிராமப்புற மக்களின் துயரத்தைப் போக்க நமது முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டியுள்ளது.

## போதுமான அளவு உணவுக் கையிருப்பு

2007-08 மற்றும் 2008-09ஆம் ஆண்டுகளில் நாம் உற்பத்தியிலும் கொள்முதல் செய்வதிலும் சாதனை அளவை எட்டியிருக்கிறோம். இதனால் நம்மிடம் போதுமான அளவு உணவு கையிருப்பு உள்ளது. எனவே நமது நாட்டில் இது குறித்த கவலை எதுவும் தேவையில்லை என்பதுடன், உணவு தானியங்களின் பற்றாக்குறை ஏற்படுமோ என்ற அச்சமோ தேவையில்லை. இந்தச் சூழ்நிலையை நாம் தீவிரமாகவும் உறுதியுடனும் எதிர்கொள்வோம் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள பகுதிகளில் தேவையான அளவுக்கு உணவுப் பொருட்கள் வினியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும். கால்நடைகளின் தீவனம் மற்றும் குடிநீர் ஆகியவை பற்றாக்குறை ஏற்படாத அளவுக்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தி

கிராமப்புற மக்களின் கரங்களில் வாங்கும் சக்தியை அளிப்பதற்கான வழிவகை இன்று நம்மிடம் உள்ளது. நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் டாக்டர் அமார்த்தியாசென் பஞ்சம் என்பது உற்பத்தியில் காணப்படும் பற்றாக்குறை இல்லை என்றும், அது மக்களின் வாங்கும் சக்தியில் காணப்படும் குறைபாடு என்றும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நமது நாட்டின் வரலாற்றில் முதல் முறையாகத் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் மூலம் நமது நாட்டு மக்களின் கரங்களில் வாங்கும் சக்தியை அளிக்கும் வாய்ப்பை நாம் பெற்றுள்ளோம்.

# வாசகர் வாசகம் 1

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு, வணக்கம்.

2011 ஜனவரித் திங்கள் இதழில் பக்கம் 34இல் வாசகர் வாசகத்தில் தெ.முருகசாமி, புதுச்சேரி அவர்கள் விட்டிசை இலக்கணத்தில் பத்தாமை என்பதற்குத் தெளிவு கேட்டுள்ளார்.

விட்டிசை இலக்கணத்தில் பத்தாமை என்பது கட்டுரை அல்ல.

விட்டிசைப்பது விட்டிசை. சிலேடை நயங்களில் ஒன்று.

(எ.டு) பலகை – பல + கை – இதில் பலகை என்பது கதவைக் குறிக்கும். பல கை என்பது பல பேர்களுடைய கைகளைக் குறிக்கும். ஆசிரியர் – ஆ சிரியர். பிராமணர்கள் உண்ட இடம் – பிராமணர் கள் உண்ட இடம்.

தலைப்புக்குரிய விளக்கம் 2010 திங்கள் இதழில் பக்கம்20–இல் கூறியிருக்கிறேன். ஆமை என்றால் ஒரு நோய் என்ற பொருளையும் தரும். பத்தாமை (பத்து+ஆமை) என்பது பத்து வகையான நோய்கள். அவை பொறாமை, தூங்காமை, கொல்லாமை, இல்லாமை, நிகழாமை... விழாமை முதலியன.

பத்தாமைகளுக்குக் காட்டப்பட்ட பாடல்கள் எந்த நூலையும் சார்ந்தவை அல்ல. அது எனது சொந்தப் படைப்பு.

புரிந்து கொள்வதற்கு விளக்கமும் அருஞ்சொற்பொருளும் தந்துள்ளேன். அது செய்யுள். சிறுகட்டுரை அல்ல.

விட்டிசை என்பது இலக்கணம். இலக்கியமல்ல.

அன்பன்

**க. பரமேஸ்வரன்,** மதுரை

## 2

மதிப்பிற்சிறந்த பெருந்தகையீர், வணக்கம்.

செந்தமிழ் இதழில் வாசகர்களின் கருத்தைக் கூற ஒரு பக்கம் ஒதுக்கலாம் எனத் தெரிவித்த எனது விருப்பத்தைச் செயல்படுத்திய தங்கட்குப் பெரிதும் நன்றியுடையேன்.

2011 சனவரி இதழில் மனித நேயம் பற்றிக் கூறி அதை மூன்றாகப் பிரித்து மூன்றாவதான தன்னினும் குறைந்த உயிர்களிடம் நேயம் காட்டுவது பற்றி விரிவாகச் சொன்ன திரு ஆறுவிரல் ஐம்பொறியார் பாராட்டுக்குரியவர்.

வேண்டாம் வன்முறை என்றதை மையப்படுத்திய கட்டுரை வரவேற்புக்குரியது.

அருமயம்பலவானரின் அரிய ஆராய்ச்சியை அறிமுகப்படுத்திய கட்டுரை தொடர வேண்டும். திருவாசக ஆராய்ச்சி வாசகர்கட்குக் களஞ்சியமாக ஆகும்.

தொல் தமிழகத்தை இலக்கிய, இலக்கண வளத்தாலும், சாசன கல்வெட்டுச் சான்றாலும், இதிகாச வரலாற்றுக் குறிப்பாலும் படம் பிடித்துக் காட்டியது முனைவர் ரா. விசயராகவரின் இலக்கியம் தரும் தொல்லியல் வரலாற்றுச் சான்றுகள் என்றதோர் அரிய கட்டுரை.

வளர்க செந்தமிழ் தொண்டு! வருக புதுத்தமிழ் கொண்டு!

**தெ. முருகசாமி,** புதுச்சேரி

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

54, தமிழ்ச் சங்கச் சாலை

மதுரை - 625 001

தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1

தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 April 2011 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2011 - 2012ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

| இரா. அழகுமலை | முனைவர் சு. விஜயன் | இரா. குருசாமி |
|---|---|---|
| செயலாளர் | முதல்வர் (பொறுப்பு) | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |


அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,
திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.'.பில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.